
Rotary

# The Vision

Monthly Bulletin

August 2020



Rtn. HOLGER KNAACK
RI President



Rtn. AL. CHOKKALINGAM
District Governor



Rtn. SUBAPRIYA
President




Rtn. RAJESWARI
Secretary



Rtn. KAVITHA PALANIKUMAR
Editor

தடம்



## ROTARY CLUB OF KARUR ANGELS

Club No. 80415 | RI District # 3000 | INDIA

karurangels@gmail.com | www.karurangels.com

| Sl. No. | The Name of Content | Page No. |
|---|---|---|
| 01. | R I President's Message | 03 |
| 02. | Trustee's Message | 04 |
| 03. | International News | 05 |
| 04. | District Message - Vizhuthugal | 06 |
| 05. | District Message - பரிமாணங்கள் | 07 |
| 06. | ரோட்டரி கலை மன்றம் | 08 |
| 07. | President Message | 09 |
| 08. | காற்றின் மொழி | 09 |
| 09. | மழை வளம், உயிர் வளம் | 10 |
| 10. | பசுமைப் பாதுகாப்பு | 11 |
| 11. | Secretary Report | 12 |
| 12. | மகிழ்வான தருணங்கள் | 14 |
| 13. | ஆகஸ்ட் மாத தடங்களின் பதிவுகள் | 18 |
| 14. | ஒளிரும் விண்மீன்கள் | 19 |
| 15. | மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு | 19 |
| 16. | September Month Planner | 20 |
| 17. | September 2020 Important Date | 21 |
| 18. | பிறந்த நாள் & திருமண நாள் வாழ்த்துகள் | 21 |
| 19. | தடம் பதித்த தாரகைகள் – முதல் தடம் | 22 |
| 20. | ஜூலை மாத இதழின் – பின்னூட்டம் | 23 |
| 21. | நல்வாழ்க்கைக்கு & இந்த பயிற்சி உங்களுக்கு | 24 |
| 22. | That will Change your Thinking - JK | 25 |
| 23. | ஆகஸ்ட் மாத நிகழ்வுகள் | 26 |
| 24. | ஆசிரியர் பக்கம் | 27 |

# ரோட்டரியை நிலையான முறையில் வளர்ப்போம்...



**Rtn. ஹோல்கர் நாக்**
**RI தலைவர் 2020 - 21**

அன்புள்ள ரோட்டேரியன்களே, ரோட்டராக்டர்களே மற்றும் நண்பர்களே,

இந்த 2020 ஆம் ஆண்டு நினைவில் நிற்கக்கூடிய மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது, நமது சேவை, கூட்டுணர்வு, பன்முகத்தன்மை, ஒருமைப்பாடு மற்றும் தலைமையின் முக்கிய மதிப்புகளை எப்போதும் பயனுள்ள வகையில் பயன்படுத்தவும், அது குறித்து காது கொடுத்து கேட்கவும், அதற்கேற்ப தகவமைத்துக் கொள்ளவும் நாம் தயாராக இருக்க வேண்டும்.

நமது தகவமைத்துக் கொள்ளும் திறனை நாம் எவ்வாறு நிரூபித்துள்ளோம் என்பது குறித்து நான் பெருமையடைகிறேன். தொற்றுநோயை எதிர்கொள்ளும் நிலையிலும், இணையவழியில் கூட்டங்களை நடத்தி சேவை செய்வதற்கான புதிய வழிகளை நாம் கண்டுப் பிடித்தோம். இரத்து செய்யப்பட்ட ஹொனலுலு 2020 ரோட்டரி சர்வதேச மாநாட்டை, நமது முதல் மெய்நிகர் மாநாடாக நாம் மாற்றியுள்ளோம். ஒவ்வொரு வாரமும், ரோட்டரி என்பது, எங்கும் நடக்கக்கூடிய ஒரு நெகிழ்வான கூட்டம் என்பதை நாம் பாரம்பரிய கூட்டங்களில், கைபேசிகளில் மற்றும் கணினி வழியாக நிரூபித்து வருகிறோம்.

ரோட்டரியின் இணையவழி மற்றும் தனிப்பட்ட கூட்டங்களின் கலவையை முன்பை விட இப்போது அதிகம் அனுபவிப்பதாகக் கூட சிலர் என்னிடம் கூறியிருக்கிறார்கள்! புதிய வகைக் கிளப்புகளை ஆதரிப்பது முக்கியமாகும். இனி அவை ரோட்டரியின் உண்மையான அங்கமாகும். பாரம்பரிய கிளப்புகளுடன், மின்னணு கிளப்புகள், ரோட்டராக்ட் கிளப்புகள், காரண அடிப்படையிலான கிளப்புகள் மற்றும் கடவுச்சீட்டு கிளப்புகள் ஆகியவை நம்மிடம் உள்ளன. இவை ரோட்டரியை மேலும் உள்ளடக்கியதாகவும், மிகவும் நெகிழ்வுள்ளதாகவும், மற்றும் புதிய உறுப்பினர்களுக்கு மிகவும் கவர்ச்சிகரமானதாகவும் மாற்ற உதவுகின்றன. இந்தச் சங்கங்களுக்கு சென்று, யோசனைகளை பரிமாறுங்கள்.

சில நேரங்களில், எண்கள் விளையாட்டில் நாம் சிக்கிக் கொண்டு பெரிய விஷயங்களை இழக்க நேரிடலாம். எல்லாவற்றிற்கும் மேலாக, அடுத்த வருடமே அந்தப் புதிய உறுப்பினர்கள் கிளப்புகளை விட்டு வெளியேறுகிறார்கள் என்றால், உறுப்பினர் அதிகரிப்பு என்பது அர்த்தமற்றதாகிவிடும். ரோட்டரியை நிலையான முறையில் வளர்ப்போம். ரோட்டரி இப்போது விதிகளைப் பற்றி குறைவாகவும், பாரம்பரிய கூட்டங்கள் தவிர, பல்வேறு வழிகளில் எவ்வாறு ஒன்றிணைவது என்பது குறித்து அதிகமாகவும் சிந்திக்கிறது.

நமது உறுப்பினர்களுக்காக நம்மால் முடிந்த அனைத்தையும் நாம் செய்கிறோமா என்றும், நாம் சேவை செய்யும் சமூகத்தை நமது சங்கம் பிரதிபலிக்கிறதா என்றும் கேட்டு அதற்கு நேர்மையான பதிலளிக்க ஒவ்வொரு கிளப்பும் வருடாந்திர மூலோபாயக் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன். இந்த வருடம், RI இயக்குநர் குழுவில் ஆறு பெண்கள் என்னுடன் பணியாற்றுகிறார்கள் என்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன், இது முன்னெப்போதும் இருந்ததை விட அதிகமாகும். ஒவ்வொரு நிலையிலும் ரோட்டரி இந்தத் திசையிலேயே நகரச் செய்வோம். ரோட்டரி செழித்து வளர்வதற்கு, நமக்கு இன்னும் தொலை நோக்குப் பார்வையும், அதிக பன்முகத்தன்மையும் தேவை.

ஆனால் ரோட்டரியில் இதுவரை மாறாத, எப்போதும் மாறாத விஷயங்கள் தோழமை, வலையிணைப்பு, நெறி முறைகள் மற்றும் சேவை. உண்மையில், ரோட்டரியை அனைவருக்கும் ஏற்றதாக்கும் மதிப்புகள் இவைதான்.

அவ்வப்போது நாம் புரட்சிகரமானவர்களாக இருக்க வேண்டும் என்று ரோட்டரியின் நிறுவனரான பால் ஹாரிஸ் கூறினார். இப்போது அத்தகைய ஒரு நேரம். நமது முக்கியமான மதிப்புகளுக்கு நாம் உண்மையாக இருக்கும் போது கூட நம்மை வலுப்படுத்தும் மாற்றத்தை நாம் தழுவுவதற்கு எண்ணற்ற வாய்ப்புகளை ரோட்டரி திறக்கிறது.

Holger Knaack

ஹோல்கர் நாக்
RI தலைவர்

## TRF தலைவரிடமிருந்து...



# இந்தப் புயலையும் வலுவுடன் எதிர்கொள்வோம்

**Rtn. KR. ரவீந்திரன்**
அறக்கட்டளை அறங்காவலர் தலைவர்
2020 - 21

ஒரு பிரச்சினைக்கும், ஒரு சவாலுக்கு இடையில் மாறுபாடுகள் உள்ள உலகம் ஒன்று உள்ளது. ஒரு மாபெரும் குளவியை, ஒரு தேனீ, தனியாக எதிர்கொண்டால், தேனீக்கு பிரச்சினையாகும். ஆனால், அதே தேனீ, அந்தக் குளவியை, மற்ற தேனீக்களின் திரளோடு எதிர்கொண்டால், பிறகு அந்தக் குளவிக்கு பிரச்சினையாகும்.

இது இயற்கையில் உண்மையாகும், இது தான் மனிதனின் இக்கட்டான நிலையும் கூட. எனவே, நான் எதிர்கொள்ளும் சூழ்நிலையானது, என்னிடம் உள்ள வளங்களை விட அதிகமாக இருந்தால், அதனை ஒரு பிரச்சினை என்று கூறலாம். இருப்பினும், நான் எதிர்கொள்ளும் சூழ்நிலையை விட என்னிடம் உள்ள வளங்கள் அதிகமாக இருந்தால், அது ஒரு சவால் மட்டுமே. சில நேரங்களில், நாம் நமது பிரச்சினைகளை மிகைப்படுத்தி, அவற்றைச் சமாளிக்கும் நமது திறனைக் குறைத்து மதிப்பிடுகிறோம்.

கோவிட்-19 தொற்றுநோய், ரோட்டரி அறக்கட்டளையை வென்றுவிடும் ஒரு சூழ்நிலை இருப்பது போல் தோன்றியது. ஆனால், விஷயங்கள் செல்லச் செல்ல, அவ்வாறு செய்வதற்கு நாங்கள் அதனை அனுமதிக்கவில்லை. ஜூன் 4 அன்றுள்ள நிலவரப்படி, இந்த மூன்று மாதகாலத்தில், 5.2 மில்லியனுக்கான 208 பேரிடர் தீர்வு மானியங்களுக்கும் 13.8 மில்லியன், 169 புதிய உலகளாவிய மானியங்களுக்கும் நாங்கள் நிதியளித்துள்ளோம். அறக்கட்டளை நிதியுடன் தனிப்பட்ட ரோட்டரியர்களின் தாராள மனப்பான்மையையும், மற்றும் பல நேரங்களில், அந்தத் திட்டங்களைப் பெரியதாகவும் மிகவும் தாக்கமுள்ளதாகவும் மாற்றுவதற்காக இதர பெருநிறுவன நிதிகளையும் நாங்கள் பயன்படுத்தியுள்ளோம்.

தொற்றுநோய் காரணமாக முழு அடைப்பு செய்யப்பட்டிருந்த போது, முழு அடைப்பு இல்லாதிருந்தால் நாங்கள் என்ன செய்திருப்போமோ அதைப் போலவே நிதி திரட்டி திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருந்தோம். இந்த ரோட்டரி அறக்கட்டளையானது 100 வருடங்களுக்கும் மேலானது, இது ஏற்கனவே பல புயல்களைக் கண்டுள்ளது - அவற்றில் சில இலேசானவை மற்றும் பிற உலகிற்கு பேரழிவை ஏற்படுத்தியவை. ரோட்டரியர்களின் வலிமை, தியாகம், இரக்கம் மற்றும் அவர்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளும் அளவின் காரணமாக, இந்த அறக்கட்டளை புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையுடனும், உத்வேகத்துடனும் எதிர்காலத்தை எதிர் கொள்ளும் என்று நான் நம்புகிறேன்.

அதன் மீது நீங்கள் தொடர்ந்து நம்பிக்கை வைத்திருக்கும் வரையில், நமது அறக்கட்டளையானது, வலுவானதாகவும், தாக்குப்பிடிக்கக் கூடியதாகவும், இந்த தொற்றுநோயிலிருந்து மீண்டுவரும்.

Ravi

**KR. ரவீந்திரன்**
அறக்கட்டளை அறங்காவலர் தலைவர்

# International News

## Jennifer E. Jones



Jennifer E. Jones, a member of the Rotary Club of Windsor-Roseland, Ontario, Canada, has been nominated to become Rotary International's president for 2022-23, a groundbreaking selection that will make her the first woman to hold that office in the organization's 115-year history.

Jones will officially become president-nominee on 1 October if no other candidates challenge her.

Jones says she sees Rotary's Action Plan as a catalyst for increasing Rotary's impact.

"As we reflect upon our new strategic priorities, we could have never envisioned that our ability to adapt would become our North Star during what is inarguably the most profound time in recent history," Jones said in her vision statement. "Silver linings rise out of the most challenging circumstances. Using metric-driven goals, I will harness this historic landscape to innovate, educate, and communicate opportunities that reflect today's reality."

As the first woman to be nominated to be president, Jones understands how important it is to follow through on Rotary's Diversity, Equity, and Inclusion (DEI) Statement. "I believe that diversity, equity, and inclusion … begins at the top and for us to realize growth in female membership and members under the age of forty - these demographics need to see their own reflection in leadership," Jones said. "I will champion double-digit growth in both categories while never losing sight of our entire family."

Jones is founder and president of Media Street Productions Inc., an award-winning media company in Windsor. She was chair of the board of governors of the University of Windsor and chair of the Windsor-Essex Regional Chamber of Commerce. She has been recognized for her service with the YMCA Peace Medallion, the Queen's Diamond Jubilee Medal, and Wayne State University's Peacemaker of the Year Award, a first for a Canadian. Jones holds a Doctor of Laws (LL.D.).

A current Rotary Foundation trustee, Jones has been a Rotary member since 1997 and has served Rotary as RI vice president, director, training leader, committee chair, moderator, and district governor. She played a lead role in Rotary's rebranding effort by serving as chair of the Strengthening Rotary's Advisory Group. She is the co-chair of the End Polio Now Countdown to History Campaign Committee, which aims to raise $150 million for polio eradication efforts.

Jones recently led the successful #RotaryResponds telethon, which raised critical funds for COVID-19 relief and was viewed by more than 65,000. Jones has also received Rotary International's Service Above Self Award and The Rotary Foundation Citation for Meritorious Service. She and her husband, Nick Krayacich, are members of The Rotary Foundation's Arch Klumph Society, Paul Harris Society, and the Bequest Society.

## *Africa declared free of wild polio in 'milestone'*



In 1996, the great African leader Nelson Mandela launched the Kick Polio Out of Africa campaign with Rotary International's support, setting out a vision for a polio-free Africa. At the time, wild polio paralysed 75,000 children each year. To protect communities from this crippling disease, African leaders, health workers, volunteers, parents, global donors and organizations united to reach every child with polio vaccines.

On 25 August 2020, after four years without a single case of wild polio, the African region has been certified free of wild poliovirus. Decades of extraordinary investment has paid off.

Yet, the job is not finished. These efforts must continue to prevent wild polio from returning and to end all forms of polio for good - both in Africa and globally.

# Vizhuthugal




## DISTRICT MEET

Our District governor Rtn. A.L. Chokalingam introduced the Program in a very beautiful way. Rtn. PDG. AKS. M. Muruganandham gives away the purpose of the meet. Our chief guest was Rtn. PDG. Aks. R. Dheenachandran, Rotary Coordinator and special speaker Mrs. KavithaJawahar graced the occasion.

The motto of the session is to increase the growth and development of the membership in each club.

## "EACH ONE BRING ONE"

This the ultimate vision towards the program. Density Index – it specifies how many Rotarians are into the crowd.
Internal growth – It should be the growth within the club.

13.24 per - women Rotarians
9.84 per - zone level
23.4 per - world level
Africa - one club with 40 per strength

The membership trend is not being stable.

The things to do to make retention is;

- We should be careful in selecting the members
- Honor the members for their good work
- Engage the members in every event
- Member satisfactory survey must be done every year
- Exiting members should submit correct reason

Membership pin is being processed in a unique manner this year

**"Nothing is impossible under the sun on this Earth"**
**You know! "Rotary can make a man into an extraordinary man"**

An orientation program has to be conducted every year for new members.

There are 8 types of Rotary clubs

- Traditional rotary club
- Corporate club
- Satellite club
- Cause-based club
- E – club•Passport club
- Alumini-based club•Rotaract club

## Why women need rotary??

- For improving self confidence&self dignity and position in society
- To improve multitasking skills of managing family and society
- Enhancing their career path and economic status through people exposure
- To develop new friendship and thus help society

## World membership data

- Worldwide rotary 12 lacs members – 23%
- RID 3000 – 5148 members – 8.5%

## Ways to strengthen the club

- Bring members who can mingle with each others
- Without ego and hesitation will make the members to develop their social interaction
- Showing empathy will not move members from the club
- Trust worthy person – reliability should be there in every move
- Should able to financially support
- Having money is not important, a member should have a thought to spend for the needy
- Due to commitments members are hesitating to take responsibilities
- If we encourage women and Rotaract and Interact, membership will increase.
- So far, 316 members joined newly

## Top prize winners

- Trichy queen city - 8 new members - 1st place
- Daalmiyapuram – 3rd place
- Trichy Town - 2nd place
- Diamond city for women also won the prize

## Zone wise orientation have been planned for the new members

Mrs. KavithaJawahar gave away a wonderful speech on membership with historical events. She completely encourages and supports the women Rotarians.

# பரிமாணங்கள்

## விழிப்புணர்வு கருத்தரங்கம்



*வலிமையில் ஆணைக் கொண்ட வல்லினம்*
*மென்மையில் பெண்மைக் கலந்த மெல்லினம்*
*இயற்கையாய் இரண்டு வாய்த்த இடையினம்*
*மாறுபட்ட தோற்றமும் மாசுபடாத மனமும் உடைய*
*ஒரு தாய் ஈன்றெடுத்த திருநங்கை...*

மூன்றாம் பாலின நலவாழ்வு குறித்த விழிப்புணர்வுக் கருத்தரங்கத்தை நமது ரோட்டரி மாவட்டம் 3000 ஏற்பாடு செய்து சிறந்த முறையில் அரங்கேற்றியது.

நமது ஆளுநர் திரு. A.L. சொக்கலிங்கம் அவர்கள் ஒரு கருத்து சொல்பவனை விட கருத்து கேட்பவனாகவே கலந்து கொள்கிறேன் எனவும், மூன்றாம் பாலினத்தாருக்கு சமூகத்தில் அங்கீகாரம், வாய்ப்பு, மரியாதை போன்றவற்றை வழங்குவது நம் கடமையாக கருதவேண்டும் என்று தன் உரையில் குறிப்பிட்டார்.மேலும் இத்திட்டத்தை செயல்படுத்தியமைக்கு பாராட்டுதலையும் தெரிவித்தார்.




ஸ்ரீ சிவானந்தா பாலாலயாவின் தலைமை செயலர் திரு. **VRK.** பாபு அவர்கள், **GNC (Gender Non-Conforming Child), LGBTQE+** என்பது பற்றி விரிவாக கூறி, பருவ பாலின இணக்கமின்மை, மரபுரிமை பற்றிய ஆய்வுகள் தெரிவித்ததையும் விளக்குரையாய் அளித்தார். மூன்றாம் பாலினத்தவர் கல்வியறிவு பெற எப்போதும் எங்கள் பள்ளியின் கதவு திறந்து இருக்கும் என்பதனை அனைவரும் அறியும் வண்ணம் வெளிப்படுத்தினார்.

மனநல மருத்துவர் கவிதா ஃபென் அவர்கள் மூன்றாம் பாலினத்தவர்களைப் பற்றி கூறுகையில், **"Social Stigma"** (சமூக களங்கம்) அதாவது ஒரு சமூகமாக சேர்ந்து வித்தியாசமானவர்களை அடையாளப்படுத்தி ஒதுக்கி வைப்பது தான் என்றும், இவர்களைப் பற்றி தெரிந்து கொண்டு கீழ்கண்ட ஐந்து விடயங்களைச் செயல்படுத்துங்கள்

1. திருநங்கைகளைப் பற்றி தெளிவாக புரிந்து கொள்ளுங்கள்.
2. அவர்களை மதிப்புடன் நடத்துமாறு நம் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுங்கள்.
3. பெற்றோர் இவர்களைக் குறித்து வேதனைப்படாமல் அவர்களை வெளி உலகத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும்.
4. அவர்களுக்கான உரிமைகள் மற்றும் பாலினச் சமத்துவத்துக்காக குரல் கொடுங்கள்.
5. திருநங்கைகளை நம்மில் ஒருவராக ஏற்றுக்கொண்டு பாதுகாப்பு கொடுங்கள். கல்வி கற்க உதவுங்கள்.

எனக்கூறி தன் உரையை நிறைவு செய்தார்

“தேடி சோறு தினம் தின்று” என்ற பாரதியின் வரிகளோடு தொடங்கிய மாவட்ட பயிற்றுநர் **M.** முருகானந்தம் அவர்கள், “அன்பே சிவம்” என்று அன்பை முன்னிலைப்படுத்தி, அன்பே சிவமாக இருப்பவர்கள் மூன்றாம் பாலினத்தவர்கள். அதிகமாக போற்றத்தகுந்தவர்கள். சமூகத்தில் புறம் தள்ளப்படுபவர்கள் அல்ல. புறம் தள்ளக்கூடாது என்பதனை மகாபாரத காப்பியக் கதைகள் மூலமாகவும் தன் கருத்தினை பதிவு செய்தார்.

அனைத்துத் துறைகளிலும் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் திருநங்கைகள். நாமும் அவர்களுக்கு பின்புலமாக இருப்போம் என தன் உரையில் தெரிவித்தார் 2021 – 2022 ஆளுநர் ஜெயக்கண்.

மூன்றாம் பாலினத்தவரைப் பிறப்பிலேயே சரிசெய்ய இயலுமா? என்ற கேள்வியோடு, மேலும் திருநங்கைகள் தன்னைத்தானே ஊக்கப்படுத்திக் கொள்வது நன்று. அவர்களும் நம்மில் ஒருவர் என்ற விழிப்புணர்வை உருவாக்குவோம் என்றார் 2022 – 2023 ஆளுநர் ஜெரால்டு.

ஆசியாவிலேயே முதன்முதலில் மூன்றாம் பாலினத்தவர்களுக்காக விடுதி அமைத்துகொண்டிருப்பது சிறப்பு, மேலும் நம்மில் ஒருவர் நம் சங்கத்தில் திருநங்கைகளை உறுப்பினராக சேர்ப்பது மட்டுமில்லாமல், அவர்களுக்காக ஒரு சங்கம் ஆரம்பித்தால் கூட நல்லது என்று திருச்சி மாவட்ட செயலாளர் திரு. R.V.S. மணி அவர்கள் தன் உரையில் தெரிவித்தார்.




திருநங்கைகளின் உரிமைக்காக குரல் கொடுப்பவர், ஓவியர், எழுத்தாளர் என பன்முகம் கொண்டவர் நம் விருந்தினர் திருநங்கை கல்கி சுப்பிரமணியம். இவர் தனது உரையில் நான் ஒரு திருநங்கையாக இருந்தும் எனக்கு கிடைத்த பெற்றோர், மருத்துவர், தோழிகள் என அனைவருமே அன்போடும், மதிப்போடும் சிறப்பாக அரவணைத்தனர். ஒழுக்கம் என்பது ஆண், பெண் இருபாலருக்கும் ஒன்றுதான் என்பதை நம் குழந்தைகளுக்கு கற்று கொடுக்கவேண்டும். மாற்றத்தை நம்மிடமிருந்து கொண்டுவரவேண்டும். “சகோதரி” என்ற தொண்டு நிறுவனத்தை 2008 ஆம் ஆண்டு துவங்கி தன்னைப் போன்றவர்களுக்கு விழிப்புணர்வு கொடுத்து கலைவழி வாழ்வாதாரமாக தையற்பயிற்சி, ஓவியப்பயிற்சி என பல பயிற்சிகளையும் கொடுத்து வருகிறேன் என தான் கடந்து வரும் பாதையின் தடங்களை வெகுவாக நினைவு கூர்ந்தார். நிகழ்வின் இறுதிகட்டதில் அவர்களே வரைந்த ஓவியங்கள் காட்சியாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. திருநங்கைகளை ஊக்குவித்து, மதிப்பளிக்கும் விதமாக நமது ரேட்டரி சங்க உறுப்பினர்கள் ஓவியங்களை மகிழ்வுடன் வாங்கிச்சென்றனர்.

இத்திட்டத்தின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்திய திட்டதலைவர் ஹேமலதா, இணைய தலைவர் விஜயஸ்ரீ, ஒருங்கிணைப்பாளர் கவிதா ஆகியோரின் முயற்சிகள் பாராட்டதக்கது.

***நன்றி...***

# ரோட்டரி கலை மன்றம்



நமது ரோட்டரி மாவட்டம் 3000, நம் உறுப்பினர்களின் கலைத்திறனை வெளிப்படுத்த வேண்டி கலைமன்றம் என்ற துணைஅமைப்பு ஆகஸ்டு 30 ஆம் நாளன்று திரைப்பட நடிகர் இளையதிலகம் திரு பிரபு அவர்களால் தொடங்கி வைக்கப் பட்டது.

நமது உறுப்பினர்களின் திறமைகளை ஒருங்கிணைத்து அவர்களின் கற்பனை வளம், ஆற்றலை ஊக்குவிப்பதற்கும், கலைநுட்பத் திறன்களை வெளிப்படுத்துவதற்குமான ஒரு தளமாக இது அமையும்.

கலை மன்றத்தின் முதல் நிகழ்வாக இசை மேடை கவித்தென்றலாக அரங்கேறியது. இனிமையான பாடல்கள் மூலம் ஒவ்வொருவரின் தனித்தன்மையான திறமைகள் அதில் வெளிப் பட்டது. ஓர் நுண்கலை விருந்தாக அமைந்த இந்நிகழ்வு நம் ரோட்டரி உறுப்பினர்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்த தேனமுதமாய் திகழ்ந்தது.



# President Message

**Rtn. சுபப்பிரியா**
சங்கத்தலைவர் 2020 - 2021

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என் ஆற்றுங் கொல்லோ உலகு

ஆம், மழையைப்போல் கைம்மாறு கருதாமல் ஒற்றுமையாய் செயல்பட்டால் இந்த உலகில் எதையும் சாதிக்கலாம்.


நான் ""Rotary Club of Karur Angels"- ல் உள்ள ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

நான் பொறுப்பேற்ற இந்த ஒரு மாதமும் எல்லா நிலைகளிலும் உறுதுணையாய் இருக்கும் அனைத்து முன்னாள் தலைவர்களுக்கும் என் நன்றி.

இந்த கொரோனா காலத்திலும் Rotaryல் விடாது பணியாற்றும் எங்கள் Karur Angels உறுப்பினர்கள், Online Meeting மூலம் ஒருங்கிணைந்து சுய முன்னேற்றத்திற்கும், நட்பு பாராட்டவும் செயல்படுகிறோம்.

இன்றைய காலகட்டத்திற்கு மிகவும் அவசியமான, உடல், மன, ஆன்ம முன்னேற்றத்திற்காக பயிற்சிகளை சிறந்த பயிற்சியாளர்கள் மூலம் மேலும் ஊக்குவிப்போம்.

*ரோட்டரி சேவையில்...*
**Rtn. சுபப்பிரியா**
சங்கத்தலைவர் (2020 - 2021)



# காற்றின் மொழி...



பெருமை கொள் - காற்றின் வகைகள் - பண்டைய தமிழன் கண்டறிந்தது - அற்புத அலசல்

கண்ணுக்கு தெரியாத காற்றைக்கூட நம் தமிழர்கள் விட்டுவைக்காமல் அந்த காற்று (Air / Wind) வீசும் திசை பொருத்து நான்காகவும், அது வீசும் வேகத்தை வைத்து எட்டு (8) ஆகவும் அந்த காற்றை வகைப்படுத்தி விவரித்துள்ளனர்.

உலகில் எந்த மொழியில் இதுபோன்று இருக்கும்! இந்த உலகம் உள்ளவரை நம் தமிழ் வாழவேண்டும்!

(அ) திசை பொருத்து காற்றின் பெயர்கள்:

(1) தெற்கிலிருந்து வீசுவது தென்றல்காற்று
(2) வடக்கிலிருந்து வீசுவது வாடைக் காற்று
(3) கிழக்கிலிருந்து வீசுவது கொண்டல் காற்று
(4) மேற்கிலிருந்து வீசுவது மேலைக் காற்று

ஆ) காற்று வீசும் வேகம் பொருத்து பெயர்கள்:

(1) 6 கி.மீ வேகத்தில் வீசும் காற்று மென்காற்று
(2) 6-11 கி.மீ வேகத்தில் வீசும் காற்று இளந்தென்றல்
(3) 12-19 கி.மீ வேகத்தில் வீசும் காற்று தென்றல்
(4) 20-29 கி.மீ வேகத்தில் வீசும் காற்று புழுதிக்காற்று
(5) 30-39 கி.மீ வேகத்தில் வீசும் காற்று ஆடிக்காற்று
(6) 100கி.மீ வேகத்தில் வீசும் காற்று கடுங்காற்று
(7) 101-120 கி.மீ வேகத்தில் வீசும் காற்று புயற்காற்று
(8) 120 கி.மீ மேல் வேகமாக வீசும் காற்று சூறாவளிக் காற்று



# மழை வளம்! உயிர் வளம்

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரனும் நாட்டிற்கு உறுப்பு

திருக்குறள் : 737

ஆற்று நீரும், நிலத்தடி நீரும், வளம் வாய்ந்த மலைகளும், மழை நீரும், வலிமையான அரண்களும் ஒரு நாட்டுக்கு தேவையான உறுப்புகளாகும் என்கிறார் நம் வள்ளுவப்பெருந்தகை.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் மூலதனமாக இயற்கை வளங்களுக்கு மகத்தான பங்கு வகிப்பது நீராகும். பெரும்பாலான பொருட்களின் தயாரிப்பிலும் மிக முக்கிய மூலப்பொருளாக அமைவதும் நீர் தான். ஆனால் தற்போது நிலத்தடி நீர்மட்டம் குறைந்துகொண்டு வருவதற்கு மக்கள்தொகை அதிகரிப்பு, தொழில்புரட்சியினால் நீரின் தேவை நாளுக்கு நாள் மிகுவதும் காரணமாகும். எனவே மழைநீர் சேகரிப்பு மிகமிக அவசியமாகிறது. எனவே நீரைச் சிக்கனமாக உபயோகிப்பதும், தொழில்நிறுவனங்கள் நீர்மேலாண்மையைக் கையாண்டு உரியமுறையில் பயன்படுத்துவதும் கூடுதல் நலம் பயக்கும். குளங்கள், ஏரிகள், கேணிகள் என அனைத்தும் மறைந்து இன்று குடியிருப்புகளாகக் காட்சித் தருகின்றன.

எனவே மீதமுள்ள நீர்நிலைகளைக் காத்து, தூர்வாரி, நிலத்தடி நீர் மட்டத்தை மேம்படுத்துவதும், மழை நீரைச் சேகரிப்பதும், ஒவ்வொரு சொட்டு நீரையும் முறையாகப் பயன்படுத்துவதும் நம் ஒவ்வொருவரின் கடமை என உணர்வோம்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் நமது மாவட்ட ஆளுநர் சூப்பர் 6 சிறப்புத்திட்டமாக மழைநீர் சேகரிப்பு திட்டத்தினை வெளியிட்டார். இத்திட்டத்தில் ஆகஸ்ட் முதல் நாளன்று தக்ஷன் யுரோ கிட்ஸ் என்ற பள்ளியில் சங்கத்தலைவர் சுபப்பிரியா, செயலர் ராஜேஸ்வரி, திட்டத்தலைவி கவிதா பழனிக்குமார், சங்கத்தின் மேனாள் தலைவர்களான லட்சுமி, மீனா, கீதா ஆகியோரின் முன்னிலையில் செயல்படுத்தப்பட்டது.

உலகில் நீர்மேலாண்மையில் முதலிடம் வகிப்பது இஸ்ரேல் நாடாகும். கடைசி இடத்தில் இருப்பது நம் இந்தியநாடு. என்ற தகவல் கவலைக்குரியது இவற்றைப் புரிந்துகொண்டு மழைத்துளிகள் ஒவ்வொன்றையும் சேகரித்து நம் மண்ணின் வளத்தைப் பாதுகாக்க உறுதி எடுப்போம்.... நன்றிகள்!








# பசுமைப் பாதுகாப்பு

மனிதனை மகிழ்வூட்டுவதில் மிக முக்கிய பங்கு வகிப்பது இயற்கை. இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் மூலம் நல்லநீரையும், தூய்மையான காற்றையும் பெற்று உலக வெப்பமயமாக்களையும் தடுக்கலாம்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக உருகாமல் இருந்த பனிமலைகள் உருகத் தொடங்கிவிட்டன. காடுகளைப் பாதுகாக்க தவறியதின் விளைவாகவும் காலநிலை மாற்றதாலும் எண்ணற்ற நோய்களால் மனிதர்களும், பிற உயிரினங்களும் பாதிப்படைகின்றன. இதற்காகவே அனைத்து நாடுகளும் காடு வளர்ப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்து தீவிரமாக செயலாற்றி வருகின்றனர்.

நமது ரோட்டரி மாவட்டம் 3000த்தின் அடையாளத் திட்டமாகிய "அடர்காடு உருவாக்குதல்" என்ற திட்டத்தின் கீழ் நமது கரூர் நகரத்திலுள்ள அனைத்து ரோட்டரி சங்கங்களும் இணைந்து ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் அடர்காடு உருவாக்கும் முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. இந்நோக்கத்தின்படி தக்ஷன் பள்ளியில் "சரக்கொன்றை" மரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்படுகின்றன.

இயற்கையை நேசிப்பதில் முக்கியமான பங்கு பெண்களுக்கு அதிகம் உண்டு. மரங்களைக் காப்பாற்ற தனது உயிரைத் தியாகம் செய்த பெண்களும் இருந்திருக்கிறார்கள். அவ்வகையில் ஜோத்பூர் மாவட்டதில் உள்ள கேஜர்லி கிராமத்தில் கி.பி. 1726 இல் மார்வாரின் மகாராஜா அபாய்சிங் அவர்களால் கெஜ்ரி மரங்கள் நடப்பட்டு, அக்கிராமத்து பெண்கள் அம்மரங்களை நல்ல முறையில் பராமரித்துவந்தனர். கெஜ்ரி மரங்கள் அடுத்த மூன்று ஆண்டுகளில் நன்கு வளர்ந்து அடர்ந்த காடுகளாய் இருந்தபோது, புதிய அரண்மனை அமைக்க, சுண்ணாம்பு தயாரிக்க மரங்களை வெட்ட அரசர் அனுப்பிய ஆட்களுக்கு எதிராக பெண்கள் திரண்டனர். 363 பெண்கள் அம்ரிதா தேவி என்கின்ற பெண்ணின் தலைமையில் ஒன்று கூடி ஒவ்வொருவரும் ஒரு மரத்தை கட்டிப்பிடித்துக்கொண்டு "எங்களை வெட்டிய பின்னே இம்மரங்களை வெட்டுங்கள்" என்று துணிந்து நின்றனர். அத்துனை பெண்களும் கெஜ்ரி மரங்களுக்காக பலியாகினர். இத்தகைய தியாகங்கள் நமக்கு உணர்துவது எல்லாம் இயற்கையை பாதுகாப்பது தான்.

நமது தமிழ் இலக்கியங்களில் மரங்களைப் பகுத்தறிவுள்ள உயிராய் பார்த்து இருந்திருக்கிறார்கள். "மனிதர்கள் இல்லாமல் மரங்கள் வாழும். மரங்கள் இல்லாமல் மனிதர்கள் வாழவே முடியாது". நாமும் மரங்களின் பயன்களையும், நலனையும் அறிந்து அடர்காடுகள் உருவாக்கி, மனித வளங்களையும் பிற உயிரினங்களையும் பாதுகாப்போம். நன்றி!

## இயற்கையின் ஆன்மீக விழிப்பு



ஆப்பிரிக்க நாட்டில் பாபாப் (**Baobab**) மரம் வாழ்க்கை மரம் என்று அழைக்கப்படுகிறது. பாபாப் மரங்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக வாழக் கூடியவை. இந்த மரம் மனிதர்களுக்கு உணவு, விலங்குகளுக்கு தீவனம், மருத்துவ கலவைகள் மற்றும் பல மூலப்பொருட்களை வழங்கக் கூடிய ஒன்று. பாபாப் மரங்கள் வியக்கத் தக்க முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கருதப் படுகிறது.



# Secretary Report - 2020 - 21

## AUGUST MONTH

*Dear Friends,*

*I Thank Our Club Members for giving me the Opportunity to Serve as a Secretary of Our Club for the year 2020-21. Here by I Share Our Club Project and Services*

| | | |
|---|---|---|
| **EVENT** | : | **RAIN WATER HARVESTING - AUG 1ST 2020** |
| Date | : | August 1st Saturday 2020, Time : 10.00 am |
| Venue | : | DAKKSHIN EUROKIDS SCHOOL |
| No. of participants | : | 5 |
| **EVENT** | : | **Weekly Meet - I** |
| Date | : | August 5th Sunday 2020, Time : 6.00 pm to 7.30 pm |
| Venue | : | Virtual Meet |
| Speaker Meet | : | Light Music with Ms. BabyRani<br>Discussion on new membership |
| No. of participants | : | 20 |
| **EVENT** | : | **BREAST CANCER AWARNESS PROGRAM** |
| Date | : | August 9th Sunday 2020, Time : 3 pm to 5 pm |
| Venue | : | Virtual meet |
| Hosted by | : | Rotract club of Karur in association with Rotary club of karur & Rotary club of karur Angels |
| No. of participants | : | 150 |
| **EVENT** | : | **DISTRICT MEMBERSHIP SEMINAR - Vizhudhugal** |
| Date | : | August 9th Sunday 2020, Time : 10.30 am |
| Venue | : | Virtual meet |
| Hosted by | : | Rotract club of Karur |
| No. of participants | : | 385 |
| **EVENT** | : | **Weekly Meet - II** |
| Date | : | August 12th Wednesday 2020, Time : 6 pm |
| Venue | : | Virtual meet |
| Topic | : | Discussion on Tree Plantation, E Bulletin Release |
| Speaker Meet | : | PP Rtn. Lakshmi - “Womenhood in service” |
| No. of participants | : | 385 |
| **EVENT** | : | **TREE PLANTATION** |
| Date | : | August 15th Sunday 2020, Time : 10.00 am |
| Venue | : | Elderly Persons - Old Age Home |
| No. of participants | : | 7 |

| | | |
|---|---|---|
| **EVENT** | : | **DISTRICT SEMINAR ON TRANSGENDER WELFARE – PARIMAANANGAL** |
| Date | : | August 16th Sunday 2020, Time : 10.30 am |
| Venue | : | Virtual meet |
| Hosted by | : | Rotary International District 3000 |
| No. of participants | : | 160 |

| | | |
|---|---|---|
| **EVENT** | : | **A COOKERY SHOW** |
| Date | : | August 16th Sunday 2020, Time : 5.00 PM |
| Venue | : | Virtual meet |
| Hosted by | : | Joint club meet |
| No. of participants | : | 60 |

| | | |
|---|---|---|
| **EVENT** | : | **WEEKLY MEET – III** |
| Date | : | August 19th Wednesday 2020, Time : 6.00 pm |
| Speaker Meet | : | Mrs. Vijayalakshmi – ART OF LIVING |
| Topic | : | Meditation |
| No. of participants | : | 20 |

| | | |
|---|---|---|
| **EVENT** | : | **OORUKU NALADHU – SURGI SHIVAM** |
| Date | : | August 20th Thursday 2020, Time : 7.15 pm |
| Venue | : | Virtual meet |
| Speaker meet | : | Mr. SurgiShivam – Joint meet |
| No. of participants | : | 112 |

| | | |
|---|---|---|
| **EVENT** | : | **ROTA BUS** |
| Date | : | August 25th Tuesday 2020, Time : 7.00 pm |
| Hosted by | : | Joint Club meet |
| Topic | : | From Zero to Hero |
| No. of participants | : | 260 |

| | | |
|---|---|---|
| **EVENT** | : | **WEEKLY MEET - IV** |
| Date | : | August 26th Wednesday 2020, Time : 6.00 pm |
| Speaker Meet | : | PP Rtn. Shanmugavalli |
| Topic | : | Self-Motivation |
| No. of participants | : | 15 |

## PAST PRESIDENTS MEET

| S.No. | DATE | TIME | TOPIC | PARTICIPANTS |
|---|---|---|---|---|
| 1. | 13th Aug 2020 | 6.00 pm | Bulletin, Financial Discussion, Tree Plantation | 6 |
| 2. | 19th Aug 2020 | 5.00 pm | Global Grants | 7 |

# மகிழ்வான தருணங்கள்...

## Rain Water Harvesting










## August 15th - TREE PLANTATION








## AUGUST 15th INDEPENDENCE DAY CELEBRATION








## cookaryshow






## Breast Cancer Awarness Program





## 5th Weekly Meeting















## 12th Weekly Meeting















## 19th Weekly Meeting

## 26th Weekly Meeting








# ஆகஸ்ட் மாத தடங்களின் பதிவுகள்


































# மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு

நாம் பேச தயக்கப்பட்டு, பெரிதும் விழிப்புணர்வற்று கடந்துபோகும் கொடிய நோயாகிய மார்பக புற்றுநோய் 2018 ஆம் ஆண்டின் புள்ளிவிவரங்களின் படி இந்தியாவில் மட்டும் 1,62,468 பெண்கள் மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதில் 87090 பெண்கள் மரணமடைந்துள்ளனர். அதாவது பாதிக்கப்பட்டவர்களில் 50% நபர்கள்.

1st & 2 nd stage ல் கண்டறியப்பட்டால் 80% முதல் 90% வரை குணப்படுத்தமுடியும்.

3rd & 4 th stage என்றால் குணப்படுத்தக்கூடிய சாத்தியகூறுகள் 24 % தான். என்கின்றன ஆய்வுகள்.

இந்தியாவில் பாதிக்கப்படும் பெண்களில் 50% பேர் 3rd & 4th stage ல் தான் புற்றுநோயால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதையே கண்டறிகின்றனர். அதன் தாக்கம் அதிகமாக இருக்கும் நிலையில், அதாவது நம் நாட்டில் புதிதாக பாதிக்கப்படும் 2 பெண்களில் 1 பெண் மரணமடைகிறார். இதற்கான அடிப்படை காரணம் இந்நோயை 1st & 2nd stage ல் கண்டறியாமல் விடுவதுதான்.

இதனைப்பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தினால் மக்களிடம் மிகப்பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டியது அவசியமாகிறது. கரூர் ரோட்டராக்ட் சங்கம், கரூர் ரோட்டரி சங்கம், கரூர் ஏஞ்சல்ஸ் ரோட்டரி சங்கம் மூன்றும் இணைந்து ஆகஸ்ட் 9ஆம் நாளன்று இந்நிகழ்வை நடத்தியது. இந்நிகழ்வில் மருத்துவர் அன்புச்செல்வன் அவர்கள் மார்பக புற்றுநோயின் அறிகுறிகள் சூழிடர் காரணிகள், நோய் அறிதல் போன்றவற்றை தமிழில் தெளிவாக கூறினார்.

மரபணுப்பிறழ்ச்சி காரணமாகவும் விவசாயத்தில் “களைக்கொல்லி” மருந்தின் அதிக பயன்பாட்டினாலும் இனி வரும் நம் சந்ததியினருக்கு குழந்தைபேறு குறைவாகும் என்றும் எடுத்துரைத்தார். ஆகவே பெண்கள் ஆகிய நாம் விழிப்புணர்வுடன் இயற்கையோடு இணைந்து இயற்கையான உணவு முறைகளை மேற்கொண்டு நம் உடல் நலத்தை பேணுவோம்.

இது பெண்களுக்கான விழிப்புணர்வு..! நமக்கான விழிப்புணர்வு...!

## SEPTEMBER MONTH PLANNER

| DATE | EVENT | DESCRIPTION |
|---|---|---|
| Sep 2nd | Speaker Meet | Rtn. Alli<br>Rtn. Anjali |
| Sep 9th | Speaker Meet | Rtn. Damayandhi |
| Sep 9th | Cookery show | Rtn. Yasmin |
| Sep 5th | One day RYLA - KATTRAL | SUPER 6 LEADS : PP Rtn. Lakshmi,<br>PP Rtn. Geetha,<br>Project Heads: Rtn. Saradha |
| | Teachers day celebration -<br>Joint club meet | Rotary club of nagarcoil and<br>Rotary club of karur angels |
| | Teachers day celebration -<br>Joint club meet | Joint meet with Karur rotary texcity |
| | Rotract club of karur - ARUVI -<br>pcos problems in teenagers | Organised by Rotract club of Thullal |
| Sep 11th | Jolly phonics - Joint club meet | RC Theni metro kings and<br>RC Karur Angels |
| Sep 13th | Department of commerce -<br>Sri saradha Niketan College | RC chennai neithal,<br>RC chennai mitra - Joint club meet |
| Sep 13th | Chonaa Times | District meet |
| Sep 16th | Kanavugal vidhaitha naayagan | AN inter district mega joint meet |
| Sep 17 - 19th | ANVAYA - District Interact RYLA | Hosted by RC TIRUCHIRAPALLI SAKTHI |
| Sep 17th | Speaker Meet<br>Cookery show | Rtn. Saradha<br>Rtn. Meena Subbiah |
| Sep 22nd | ROTA BUS - GREEN MONEY | Joint club meet |
| Sep 23rd | Speaker Meet<br>Cookery show | Rtn. Yasmin<br>Rtn. Neelavathy |
| Sep 26th | Governor - General Meet | Karur Presidents and Secretaries |
| Sep 30th | The needs of children with<br>Disabilities in Inclusive Schools | Joint club meet with Theni metro kings |

# SEPTEMBER 2020 Important Dates

| SUN | MON | TUE | WED | THU | FRI | SAT |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 ★ | 3 | 4 | 5 ★ |
| 6 | 7 | 8 | 9 ★ | 10 | 11 ★ | 12 |
| 13 ★ | 14 | 15 | 16 ★ | 17 ★ | 18 ★ | 19 ★ |
| 20 | 21 | 22 ★ | 23 ★ | 24 | 25 | 26 ★ |
| 27 | 28 | 29 | 30 ★ | | | |

## அன்புடன் வாழ்த்துகின்றோம்...

### பிறந்தநாள் வாழ்த்துகள்




S. Sumitha Saiprasad
28.09.2020

### திருமணநாள் வாழ்த்துகள்



G. Sudha Karthekeyan
27.09.2020

# தடம் பதித்த தாரகைகள்
# "முதல் தடம்"



சிந்தனையில் தெளிவு கொண்டு தைரியமாக, எடுத்தக் காரியத்தை வெற்றிகரமாக செயல்படுத்தக்கூடியவர், மனித நேயமிக்கவர், வீணை, கிடார், ஓவியம் வரைதல், ரங்கோலி என பன்முகத் திறமைகளைக் கொண்டவர். தற்போது ஏஞ்சல்ஸ் சங்கத்தில் பட்டயச் செயலாளராக இருந்து வருகிறார். அதோடு Vasavi Clubs International District V 501A மாவட்ட ஆளுநர் பதவியை மிக அழகாக அலங்கரிக்கிறார். இவர் தாம் கடந்து வந்த தடத்தினை நம்மோடு பகிர்ந்துகொள்கிறார்–

நாளைய தேவையை இன்றே திட்டமிட்டுக்கொள்வதுதான் வாழ்வின் வெற்றிக்கு பெரும் ஊக்க சக்தியாக அமையும்!

அந்த அனுபவத்தை கற்றுக்கொள்ள ரோட்டரி எனக்கு பெரும் பாலமாக இருந்திருக்கிறது. சேவை மனப்பான்மை, நட்பு பழகுவது, வாழ்வின் குறிக்கோள் என பல உன்னதமான தருணங்களை இங்கேதான் பெற்றேன்.

என் கணவர் இந்தத்துறையில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவம் பெற்றவர் என்பதால் அது எனக்கு இன்னும் தூண்டுகோளாக அமைந்தது. தற்போதைய 'ரோட்டரி கிளப் ஆஃப் கரூர் ஏஞ்சல்ஸ்' அமைப்பின் தாய் கழகமாக இருந்த கரூர் டெக்ஸ் சிட்டி கிளப்-பில் இணைந்து ஏற்கனவே பல பணிகள் செய்த அனுபவம், ஏஞ்சல்ஸ் சங்கத்தின் தொடக்க காலத்தில் செயலாளராக பதவியேற்ற பின் எங்கள் தலைமையில் இந்த ரோட்டரி அமைப்பையும் வழி நடத்த பெரும் பலமானதாக கருதுகிறேன்.

அன்றைய நாட்களில் 27 பெண்களோடு தொடங்கினோம். எல்லோருமே ஒரே வயது பெண்மணிகள். நல்ல நட்புறவு, நற்சேவை என அவ்வளவு பெருமைக்குரிய நிகழ்வுகளை அரங்கேற்றியிருக்கிறோம்.

கிட்டத்தட்ட 12 ஆண்டுகள் அனுபவம். ஒரு பெண்ணுக்கு தன்னோட ஆளுமையை சரியான இடத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்கிற துடிப்பு இருந்துகொண்டே இருக்கும். அந்த மகிழ்வை ரோட்டரி என்னோட தலைமை பொறுப்பில் இருக்கும்போது அனுபவித்திருக்கிறேன். அவ்வளவு நல்ல விஷயங்களை செய்த மகிழ்ச்சிதான் அது.

ஏஞ்சல்ஸ் கிளப் வழியே நிகழ்த்திய பல நிகழ்ச்சிகளுக்கு வங்கி அதிகாரிகள், மாவட்ட ஆசிரியர், உயர்நீதி மன்ற நீதிபதிகள் என பலரையும் நடுவர்களாக அழைத்து வந்து அவர்கள் முன்பு பல நல்ல செயல்திட்டங்களை செயல்படுத்தியதை இன்றைக்கும் பெரும் சாதனையாகவே கருதுகிறோம்.

ஒரு சாதாரண பெண்ணாக இருந்தால் இதெல்லாம் சாத்தியமே இல்லை. ரோட்டரியால்தான் அனைத்தும் சாத்தியமானது. இது வழியே அடைந்த பயன் எண்ணில் அடங்காதது. ஒவ்வொருவரிடமும் எப்படி பொது வெளியில் பழக வேண்டும்? ஒரு வேலையை மற்றவரிடம் எப்படி பிரித்து கொடுத்து வாங்க முடியும்? திறமைக்கு ஏற்றமாதிரி வெற்றி எப்படி அமையும் என்பதெல்லாம் இங்கேதான் கற்றேன்.

நான் 12ம் வகுப்புக்கூட முழுமையாக படிக்கவில்லை. ஆனால், இன்று தேசிய அளவிலான ஒரு டிரஸ்டியில் கவர்னர் என்கிற பொறுப்பில் இருக்கிறேன். அதுக்கு ரோட்டரி கற்றுக்கொடுத்த அனுபவம் அதிகம். அங்கே தலைமைப் பொறுப்பில் இருந்து செய்த செயல்கள் ஒரு முக்கிய அங்கம்! இந்த சமூகத்தை எதிர்கொள்ள, கடந்துபோக ரோட்டரி எனக்கு பல விஷயங்களை கற்றுக்கொடுத்திருக்கிறது.


அதில் முக்கிய நிகழ்வுகளாக...

ஒருமுறை 8 நாட்கள் நாங்கள் மேற்கொண்ட 'டுவிலர் ராலி' பயணம். தமிழ்நாடு முழுக்க ரெவென்யூ மாவட்டங்களாக தேர்வு செய்து மக்களை சந்தித்ததில் என் வாழ்க்கையில் மறக்க முடியாத அனுபவம்.

அதேபோல, சர்வதேச அளவிலான பயணத்தில் 10 நாட்கள் ஜப்பான் சென்று திரும்பிய அனுபவமும் மறக்க முடியாதது. இதெல்லாம் பெண்களாக நாங்கள் மட்டுமே ஒருங்கிணைத்து திட்டமிட்டு சாதித்தவை. இது வழியே கிடைத்த விருதுகள் ஏராளம். மேலும், டிரஸ்டி, தலைவர், தாளாளர் என பல்வேறு விதமான பொறுப்புகள் தொடர்ந்து ரோட்டரி வழியே நிர்வகித்தும் வந்திருக்கிறேன். இன்னும் உழைத்துக்கொண்டே இருக்க விரும்புகிறேன்!

தற்போதைய கோவிட் -19 காலகட்டங்களையும் எப்படி எதிர்கொள்ள வேண்டும், அதன் விழிப்புணர்வு உள்ளிட்டவைகளை ஆராயும் அளவுக்கு ரோட்டரி பெரும் பயிற்றுக்கூடமாக இருக்கிறது. தொடர்ந்து இந்த சேவையை ஃபேஷனாக எடுத்துக்கொண்டு செய்வதை எப்போதுமே பெருமையாக கருதுகிறேன்.




**நன்றி!!**

திருமதி. **லட்சுமி பாலாஜி**
தலைவர் (2009 -10)

# சென்ற இதழின் "தடம்" பதித்த "பின்னூட்டம்"

ஆசிரியருக்கு வணக்கம்!

தடம் கண்டேன்! இந்த இதழ் ஒரு பிஞ்சுக் கால்களின் தடம் போன்றது. ஆனால் இதழில் பதிந்த பொதிந்த செய்திகள் துஞ்சாமல் பணியாற்றிய பலரின் பெரும் தடங்களாகும்.

தடம் தடங்கல் இன்றி தொய்வின்றி தொடர்ந்து வெளி வரவேண்டும் என்பது எம் விழைவும் விருப்பும் ஆகும். அருமை ! மகிழ்ச்சி! பாராட்டுகள்! இதழை முழுமையாகப் படித்தேன்! இது ஒரு படித் **தேன்!**

தங்கள் தமிழ் நடை இனித்தது. மகளிர் மாட்சியுடைய கரூர் படை கண்டு வியந்தோம்!

இந்த உள்ளடக்கம் அனைத்தும் அருமை. குறிப்பாகத் தமிழ்ப் பதிவுகள் அனைத்தும் களிப்பூட்டின. அனைவரின் பதிவுகளும் தெளிந்த நீரோடை போன்று நல்ல தமிழ்ச் சொற்களில் அமைந்துள்ளது சிறப்பு!

உள்ளீடுகள் அனைத்தும் தேவதைகளின் தேன் கிண்ணமாக இனித்தது.

மொத்தத்தில் இதழாக்கம் எழுத்து, வடிவமைப்பு மற்றும் வேர் பிடித்த எண்ணங்கள், ஏர் பிடித்த செயல்பாடுகள் அனைத்தும் பொது நல மேன்மையையும் குமுகாய ஒற்றுமையையும் பறை சாற்றுகின்றன; பயன் தருகின்றன. கரூரில் இப்படி ஒரு தேவதைகள் கூட்டமா? என நினைந்து வியந்து நிற்கிறேன்.

இந்தத் தடங்கள் தான் நாளைய வரலாற்றுக் கல்வெட்டுகள்! தோய்ந்த தொய்வற்ற மெய்ப் பணித் தொடர்க! படர்க! வாழ்த்துகள்! தொடர்ந்து இதழை அனுப்பித் தருக! இன்பம் பருக! என்றும் வேண்டும் இன்ப அன்பு, நன்றி!

திரு. **சு. குமணராசன்**
தலைவர், இலெமுரியா அறக்கட்டளை, மும்பை.

*தடம் கண்டேன்*
*தன்னிகரில்லா இதழென்றும்*
*தகவல் சுரங்கமென்றும்*
*தமிழால் நிரம்பிய கலனென்றும்*
*தனித்தனியே வாழ்த்திட*
*தயக்கமேதும் இல்லை*
*தனித்துவமான இதழென*
*தகவல்களை அள்ளியள்ளி*
*தந்தே மகிழ்வூட்டும்*
*தன்னிகரில்லா களஞ்சியமிது*
*தாய்மொழியில் தலைநிமிர்ந்து*
*தனித்துவமாய் பெருமையோடு*
*தழைத்தோங்கி நெடுநாள்*
*தகவல்தந்து வாழி வாழி*
*தகவல்களை நாமறிய*
*தயக்கமின்றி களமிறங்கி*
*தந்துதவும் இதழாளர்*
*தமிழ்போல் வாழி !*

Rtn. **V.S.பாஸ்கரன்**
மாவட்டச் செயலாளர், ரோட்டரி மாவட்டம் 3000

இதழின் ஆக்கமும் படைப்புக்களும் அதனுடைய வடிவமைப்பும் அதில் அமைந்திருக்கக் கூடிய நிழற்படங்களும் மிக அருமை. தடம் இதழினை வாசித்தேன்; மிக அருமையாகத் தடம் புரளாமல் ஆற்று வெள்ள நீரோட்டம் போல் அழகாக அமைந்திருந்தது. ஒரு நல்ல இதழுக்கான தேவை என்ன என்று பார்க்கின்ற போது உள்ளடக்கம். அந்த உள்ளடக்கம் தான் அரசன் என்பார்கள். அப்படி இந்த தடம் இதழில் இருக்கக் கூடிய அத்துணை செய்திகளும் அருமை. ஒவ்வொருவரும் மிகச் சிறப்பான செய்திகளை பகிர்ந்திருக்கிறார்கள். வரவேற்புக்குரியது. இந்த இதழாசிரியர் மிக இலகுவாகக் கையாண்டிருக்கிறார் என்பது தெரிகிறது. அவருடைய ஆழ்ந்த ஈடுபாடு, எளிமையான நடை முதலியவைகளைக் கொண்டு மிக அற்புதமாக வடிவமைத்திருக்கிறார்கள். ஒரு சிறப்பான சிற்பியின் கையில் கொடுத்த உளி போன்று இந்த இதழ் மிக நேர்த்தியாக அமைந்திருக்கின்றது. தொடர்ந்து இத்தகைய பணிகளை அயராது ஆற்றுமாறு இந்த தடம் இதழ் ஆசிரியரையும், அவருடைய குழுவினரையும் கேட்டுக் கொள்கிறேன். மிகச் சிறப்பான இதழ் தொடர்ந்து வெளி வர தடம் பத்திரிக்கைத் துறையில் இதழ் துறையில் பல சாதனைகளைப் படைத்துத் தடம் பதிக்க வேண்டுகின்றேன்

**Dr. சந்திரமோகன்**
மேனாள் முதல்வர்
ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை

வாழ்க வையகம். வாழ்க வளமுடன்.

சென்ற இதழின் உருவாக்கம் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது.

இதுவரை நடந்து வந்துள்ள பாதையிலிருந்து புதியபாதைக்குத் தடம் அமைத்துள்ளார்கள்.

இக்கையேட்டின் ஒவ்வொரு பக்கமும் செதுக்கப்பட்டுள்ள விதமே கரூர் தேவதைகளின் செயல்பாட்டுக்கு ஒரு சான்று.

தடம் என்ற சொல்லின் பொருள் கூறி, ஒவ்வொரு தனிமனித முயற்சியும் ஒரு நல்ல தடமாக அமைய முயற்சி எடுக்க வேண்டும் என்றும்,

**தடம் பார்த்து நடப்பவன் மனிதன்**
**தடம் பதித்து நடப்பவன் மாமனிதன்**

என்ற காஸ்ட்ரோவின் சொற்களுக்கு ஒரு சான்றாகவும் இந்தக் கையேடு அமைந்துள்ளமை பாராட்டுதலுக்குரியது.

வாழ்க கரூர் ஏஞ்சல்ஸ் ரோட்டரி சங்கம்.

அவர்களின் தொண்டு மென்மேலும் புதிய தடங்களை அமைக்க வாழ்த்துக்கள்!

**Mrs. S.R. Leela,** M.Sc.,M.A.,M.Ed.,
Headmistress (Rtd.),
SKY Yoga Professor,,Kanchipuram.



தடத்தின் முதல் பதிவைப் பார்த்தேன். அந்த தடத்தைப் பற்றி நானும் எனக்கானத் தடத்தைப் பதிக்கவே விரும்புகிறேன்.

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்நாளில் ஒரு 100 மரங்களையாவது வைப்பதை நற்காரியமாக அல்லது இப்பூவுலகிற்கு செய்யும் கடமையாக கருதவேண்டும்.

இதை பிறந்த நாள், திருமணநாள் போன்ற நாட்களை கொண்டாடும் போது ஒவ்வொரு வருடமும் ஒரு பத்து மரங்களை நட்டாலே பத்து ஆண்டுகளில் 100 மரங்களை நட்டுவிடமுடியும்.

இப்படியான ஒரு திட்டத்தை எனக்குள் ஒரு விதையாக போட்டது இந்த "தடம்" தான். முக்கியமாக ஆசிரியரின் கட்டுரை நாயகன் தன் வாழ்வை அர்ப்பணித்து தனி ஒரு மனிதனாக பெரும் காட்டை உருவாக்கிய தி ஃபாரஸ்ட் மேன் ஆப் இந்தியா "ஜாதவ் பயங்க்" போல் நாம் எல்லோரும் வர முயற்சி செய்யவேண்டும். நம்முடைய வாழ்க்கை சூழலில் நாம் நிச்சயமாக ஒரு நூறு மரங்களையாவது வைத்துவிடவேண்டும் என்கிற நம்பிக்கையில் ஒரு நூறு மரங்களை சுமந்து கொண்டு இதோ இந்த தடத்தின் வழியே நானும் நடந்து வருகிறேன்.

**சதா ரத்தினம்,** சென்னை

# நல் வாழ்க்கைக்கு



இன்றைய சூழலில் உலகில் எங்கு பார்த்தாலும் கேட்கின்ற ஒரே வார்த்தை கொரானா.

யாருக்கு உடலில் நோய் எதிர்ப்பு சக்தி இல்லையோ அவர்களை இந்த வைரஸ் தாக்குவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

நமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது எப்படி?

இயற்கையிலேயே நமது உடல் தன்னைக்காத்துக்கொள்ளக்கூடிய அனைத்து ஆற்றலையும் பெற்றுள்ளது. நாம் அன்றாடம் சாப்பிடும் உணவு வகைகள், தண்ணீர், உடற்பயிற்சிகள், தியானம் மற்றும் மூச்சுப்பயிற்சிகள் மூலமாகவும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக்கொள்ளலாம்.

எல்லா உணவு வகைகளையும் எல்லா வயதினரும் எடுத்துக் கொள்ள முடியாது. எல்லா உடற்பயிற்சிகளையும் செய்யவும் முடியாது.

அனைத்து தரப்பினரும் எளிய முறையில் மூச்சுப் பயிற்சிகளை செய்யலாம். நடக்க ஓட முடியாதவர்கள் கூட மிக சிறப்பாக செய்யக்கூடியது மூச்சுப் பயிற்சிகள் மட்டுமே.

பிராணாயாமம் போன்ற பயிற்சிகள் செய்வதன் மூலம் நமது நுரையீரலை அதிகம் விரிவடையச்செய்யமுடியும். இதனால் அதிக அளவில் ஆக்சிஜனை நமது உடலுக்குள் கொண்டு செல்ல முடியும். ஆக்சிஜன் எந்தளவிற்கு நமது ரத்தத்தில் சேர்கிறதோ அந்தளவிற்கு ரத்த ஓட்டம் சீராகிறது. உடலில் ரத்த ஓட்டம் சீராக இருந்தாலே எந்த நோயும் நம்மை எளிதில் தாக்காது.

ஆகவே, மூச்சுக்காற்றை அதிகளவில் நுரையீரலுக்குள் செலுத்தும் போது உடலில் உள்ள அனைத்து செல்களும் புதுப்பிக்கப் படுகின்றன. எதிர்மறையான (Negative) எண்ணங்கள் மறைந்து நேர்மறையான (Positive) எண்ணங்கள் அதிகரித்து , மனதில் ஒரு அமைதி ஏற்படும். மனதில் அமைதியும் ஆனந்தமும் இருந்தால் மூளையில் செரட்டோனின் எனும் வேதிப்பொருள் அதிகமாக சுரக்கும்.

செரட்டோனின், நமது வயிற்றில் சீரணமண்டலத்தை சீராக்கி பசி மற்றும் செரிமாணத்தை சரி செய்கிறது.

தொடர்ந்து தியானம் மூச்சு பயிற்சிகள் செய்பவர்களை பார்க்கும்போதே நமக்கு புலப்படும் ஒரு விஷயம் அவர்கள் முகத்தில் காணப்படும் தேஜஸ். காரணம்... கழிவுகள் சரியான முறையில் நமது உடலிலிருந்து வெளியேறினாலே போதும் உடலுக்கு நோயே வராது.

எனவே உடல் சீராக இயங்க நல்ல சத்தான உணவு,எளிய உடற்பயிற்சி, தியானம் மற்றும் மூச்சுப்பயிற்சிகள் செய்து, நோய் எதிர்ப்பாற்றலை அதிகரித்து நாம் இந்த கொரானாவை எதிர்கொண்டு வெற்றி காணலாம் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**கோ. கண்ணதாசன்**
வாழும் கலை மூத்த ஆசிரியர், திருப்பூர்.



## இந்தப் பயிற்சி உங்களுக்கு...

ல/ ள / ழ மூன்றிற்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் தான் தமிழை தவறாக பேசுகிறார்கள்.


எனது பாட்டி எங்களுக்கு கொடுத்த பயிற்சி:

அவளை அவலளக்கச் சொன்னேன்,
அவளும் அவலளக்கவில்லை.
இவளை அவலளக்கச் சொன்னேன்,
இவளும் அவலளக்கவில்லை.
அவளும், இவளும் அவலளக்காவிட்டால்,
எவள் அவலளப்பாள்?

வியாழக்கிழமை ஆழமான குழியில் வாழைப்பழம் அழுகிக் கொழுகொழுத்து விழுவதைக் கண்ட குழந்தைகள் அழத்தொடங்கினர்.

தோவாழாக்கோட்டையிலே
மூவாழாக்கு உழக்கு நெல்லுக்கு ஏழாயிரத்து, எழுநூற்று, எழுபத்தேழு வாழைப்பழம்!

சொல்லிப்பாருங்கள்!





# That Will Change Your Thinking



Jiddu Krishnamurti was a motivational speaker whose teachings have helped millions. The promulgator of the concept of embracing the good and bad around us and thus rising to a higher level of consciousness, Krishnamurti was a revered speaker with the Theosophical Society. However, he ended his long time association with the community over a disagreement. He was the President of Theosophical Society but an incident which filled him with spiritual awakening caused him to renounce the post. The World Teacher insisted that religion will take humans nowhere near the truth. Here's a firsthand account of the incident which changed Krishnamurti's life radically.

The evangelist says, "Ever since I left Australia I have been thinking and deliberating about the message which the Master K.H. gave me while I was there. I naturally wanted to achieve those orders as soon as I could, and I was to a certain extent uncertain as to the best method of attaining the ideals which were put before me. I do not think a day passed without spending some thought over it, but I am ashamed to say all this was done most casually and rather carelessly. But at the back of my mind the message of the Master ever dwelt.

Well, since August 3rd, I meditated regularly for about thirty minutes every morning. I could, to my astonishment, concentrate with considerable ease, and within a few days I began to see clearly where I had failed and where I was failing. Immediately I set about, consciously, to annihilate the wrong accumulations of the past years. With the same deliberation I set about to find out ways and means to achieve my aim.

During that period of less than three weeks, I connected to keep in mind the image of the Lord Maitreya throughout the entire day, and I found no difficulty in doing this. I found that I was getting calmer and more serene. My whole outlook on life was changed.

Then, on the 17th August, I felt acute pain at the nape of my neck and I had to cut down my meditation to fifteen minutes. The pain instead of getting better as I had hoped grew worse. The climax was reached on the 19th. I could not think, nor was I able to do anything, and I was forced by friends here to retire to bed. Then I became almost unconscious, though I was well aware of what was happening around me. I came to myself at about noon each day. On the first day while I was in that state and more conscious of the things around me, I had the first most extraordinary experience. There was a man mending the road; that man was myself; the pickaxe he held was myself; they very stone which he was breaking up was a part of me; the tender blade of grass was my very being, and the tree beside the man was myself. I almost could feel and think like the roadmender, and I could feel the wind passing through the tree, and the little ant on the blade of grass I could feel. The birds, the dust, and the very noise were a part of me. Just then there was a car passing by at some distance; I was the driver, the engine, and the tyres; as the car went further away from me, I was going away from myself. I was in everything, or rather everything was in me, inanimate and animate, the mountain, the worm, and all breathing things. All day long I remained in this happy condition. I could not eat anything, and again at about six I began to lose my physical body, and naturally the physical elemental did what it liked; I was semi-conscious.

I have seen the Light. I have touched compassion which heals all sorrow and suffering; it is not for myself, but for the world. I have stood on the mountain top and gazed at the mighty Beings. Never can I be in utter darkness; I have seen the glorious and healing Light. The fountain of Truth has been revealed to me and the darkness has been dispersed. Love in all its glory has intoxicated my heart; my heart can never be closed. I have drunk at the fountain of Joy and eternal Beauty. I am God-intoxicated."

**Jiddu Krishnamurti**
Public Speaker & Philosopher
Madanapalle of Andhra Pradesh

# ஆகஸ்ட் மாத நிகழ்வுகள்

2nd August




6th August




8th August




9th August




9th August




15th August




19th August




21st August





29th August





# ஆசிரியர் பக்கம்...

**Rtn. கவிதா பழனிக்குமார்,** இதழாசிரியர் (2020 - 21)



எண்ணற்ற பெண்கள் தங்களுடைய வாழ்நாளை இந்த சமூகத்தில் ஏதாவது ஒரு வகையில் சமூகசேவைக்காகவோ, குடும்பத்திற்காகவோ ஒப்படைக்கின்றனர். அவர்கள் ஆற்றும் பணிகளுக்கு ஒரு அங்கீகாரம் எளிதில் கிடைத்துவிடுவதில்லை. ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே ஒரு பெண் போராடி வெற்றிகண்டு இச்சமுதாயத்தை மீட்டு இருக்கிறார். வரலாற்றில் என்றும் வாழும் அவர் பதித்தத் தடத்தை இவ்வேளையில் நாம் நினைவு கூறுவதும், அறிவதும் அவசியம்.

வீரத்தை விதையாய் விதைத்து,உதிரத்தைத் தண்ணீராய்ப் பாய்ச்சி,உயிரை உரமாய் இட்டு வளர்த்த விடுதலைப் பயிரைத் தான் நாம் அனைவரும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

நம்மவர்களிடம் விடுதலைக்காகப் பாடுபட்ட வீரர்கள் யார் என்று கேட்டால், வ.உ.சிதம்பரனார், சுப்பிரமணியசிவா, மகாகவி பாரதியார், பகத்சிங் போன்றோரின் பெயரைத் தான் கூறுவோம். ஆனால் விடுதலைக்காகப் பாடுபட்ட பெண் வீரர்களின் வரலாறும் உள்ளன. அவற்றுள் நம் தமிழகத்தைச் சேர்ந்த வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்குத் தனித்த இடம் உண்டு.

வீரமங்கை ஜான்ஸிராணிக்கு முன்பே 18 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்க்கு எதிராக நாட்டின் விடுதலைக்காகப் போராடிய முதல் பெண் வீரமங்கை வேலுநாச்சியார். தமிழகத்தின் கடைக் கோடி மூலை சிவகங்கைச் சீமையிலிருந்து வெள்ளையர்களை விரட்டி அடித்தார் என்கின்ற பெருமை இவருக்கு மட்டுமே உண்டு.

வீரம், மன உறுதி, நாட்டுப்பற்று, பன்மொழிப் புலமை போன்ற அனைத்து ஆளுமை, திறமைப் பண்புகளோடு வரலாற்றில் தடம் பதித்தவர் வீரமங்கை வேலுநாச்சியார். இவருக்கு உறுதுணையாகவும், அரணாகவும் மருது சகோதரர்கள் இருந்தனர் என்பது சிறப்பு.

20ஆம் நூற்றண்டில் இருந்தே பெண்களுக்கான சம உரிமை பற்றிப் பேசிப் பெருமை கொள்கிறோம்.ஆனால் 18ஆம் நூற்றாண்டிலேயே ஒரு பெண்ணின் தலைமையை ஆண்கள் மதித்து ஏற்றுக் கொண்டு வாழ்ந்திருக்கின்றனர்.

வேலுநாச்சியாரின் கணவரை ஆங்கிலேயர்கள் சூழ்ச்சி வலை பின்னிக் கொன்றதுடன், அவரையும் சிறைப் பிடிக்கப் பெரிதும் முயன்றனர். அவ்வேளையில் நாச்சியாரின் இருப்பிடத்தை அறிந்த உடையாள் என்ற பெண்ணை வதை செய்தும் அவர் காட்டிக் கொடுக்க முன்வரவில்லை. அதற்காக உடையாளைத்துண்டு துண்டாக வெட்டிக் கொன்றனர். உடையாளின் வீரம் போற்றும் விதமாக அவருக்குச் சிவகங்கையில் கோயில் எழுப்பினர்.

வேலுநாச்சியாரின் படையைச் சார்ந்த குயிலி என்னும் இளம்பெண் இந்திய வரலாற்றில் முதன்முறையாக மனித வெடி குண்டாக மாறி ஆங்கிலேயரின் ஆயுதக் கிடங்கை அழித் தொழித்தார். இந்திய விடுதலை வரலாற்றில். இவ்வாறான தடங்களைப் பதித்துச் சென்ற பெண்களைப் பதிவு செய்ய வேண்டியது எதிர் காலத்திற்குத் தேவையான ஒன்று.

"எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை
காண் என்றே கும்மியடி "

எனப் பாரதியார் பாடியதற்கு ஏற்ப அனைத்துத் துறைகளிலும் பெண்களுக்கே எடுத்துக்காட்டாகத் தடம் பதித்துச் சென்றுள்ள வீரமங்கைகள் வேலுநாச்சியார், உடையாள், குயிலி போன்றோரின் வீர வரலாற்றைப் போற்றுவோமாக.

அன்புடன்...
**Rtn. கவிதா பழனிக்குமார்**
இதழாசிரியர்
2020 – 21

Samrakshya's
# women's clinic

**மகளிர் சிறப்பு ஆலோசனை மற்றும் சிகிச்சைகள்**

நெ.14/1 தெற்கு மடவிளாகம் தெரு, லாரிமேடு அருகில்,
கரூர் - 639 001. செல் : 81109 30803

ஒரு பெண் ஆரோக்கியவதியாய் இருந்தால் மட்டும் தான் அவளது குடும்பம் அதன் வழி அவளது சமூகம் ஆரோக்கியமாய் இருக்கும். ஆகவே பெண்ணின் ஆரோக்கியத்தை பாதுகாக்க சம்ரக்ஷியாவில் சிறப்பு women's clinic (மகளிர் சிகிச்சையகம்) தொடங்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

## சிறப்பு சிகிச்சைகள்



- வாழ்க்கை முறை கோளாறுகள் [ Life style disorder ]
  [உடல் பருமன், Diabetes மற்றும் பல ]
- மகளிர் பிரச்சனைகள்
  - ஆரம்பகால மாதவிடாய் பராமரிப்பு
  - வெள்ளைப்படுதல் [ LEUCORRHOEA ]
  - அதிகப்படியான இரத்தப்போக்கு
  - நார்த்திசுக்கட்டிகள் ( கருப்பையில் உண்டாகும் கட்டி )
  - மாதவிடாய் கோளாறுகள்
  - வலியுடன் சேர்ந்து மாதவிடாய் (டிஸ்மெனோரியா)
  - இளம் பருவப் பெண்களுக்கு கவுன்சிலிங்.
  - கருவக நீர்க்கட்டி [ PCOS ]
  - எண்டோமெட்ரியோசிஸ்,
  - அடினோமயோசிஸ், கருப்பை நீர்கட்டி
  - Peri Menopausal care
  - Post Menopausal care .
- கர்ப்ப கால பராமரிப்பு [Ante natal care]
- பிரசவத்திற்க்கு பின் கவனிப்பு [ Post Natal Care ]
- குழந்தையின்மை [ மலட்டுத்தன்மை ]
  (Male Infertility / Women Infertility)

மருத்துவர்
**Dr.Aathira.C BAMS**
Reg No : 19386
( Consulting Physician & Nutritionist )

**CONSULTING TIME**
திங்கள் [ Monday ]
வியாழன் [ Thursday ]
3.30 PM-7.30 PM

**For Appointment : 81109 30803**